**கெழுதகை நண்பர்**
**கவிஞர் கு. ப. அசோகன்**
**அவர்களின்**
**பணி நிறைவுப் பாராட்டு!**

அறுபது வயதிலும்
இருபதின் துடிப்பு !
அருந்தமிழ்க் கவிதை
வடிப்பதில் விருப்பு !

சிறு சிறு சொற்களைத்
தேடித் தொகுத்து
சிந்தனை என்னும்
சாறு பிழிந்து

அருந்தமிழ் அமுதை
அருந்தக் கொடுக்கும்
அசோகன் என்னும்
அற்புதக் கவிஞர் !

சங்கத் தமிழைக்
கற்றத னாலோ
சுங்கம் இவரைச்
சுண்டி இழுத்தது !

எடுத்த செயலைத்
தொடுத்து முடிப்பவர்
அடுத்தவர் நெஞ்சில்
ஆழப் பதிபவர் !

அறுபது என்பது
உடலின் வயது
ஆனால் என்றும்
இளையது மனது !

அரசுப் பணியில்
நிறைவு என்பது
ஆன்மிக இலக்கியப்
பணியில் தொடர்வது !

உழைப்பி மேன்மையை
அறிந்தவர் எல்லாம்
களைப்பில் லாமல்
கடமையைச் செய்வர்!

கற்றவர் நற்கலை
கைவரப் பெற்றஇக்
கவிஞரும் அதுபோல்
கவினுற மிளிர்வார் !

கவிதையில் கிடைத்த
அறிமுகம் எனக்கு
கண்டதில்லை நான்
கவிஞரை நேரில்

ஆயினும் என்ன
தமிழால் இணைந்தோம்.
ஆயிரம் காலம்
அவர்பணி தொடர

வல்லமை தருவாள்
வண்ணத் தமிழ்த்தாய்
நல்லவர் வாழ்க
நண்பர்கள் போற்ற !

என்று இந்நாளில்
இவரை வாழ்த்துவேன்
குன்றாப் புகழுடன்
கோடி நாள் வாழ்க !

அன்பு நட்புடன்,
**வெற்றியூர் சுப. திருஞானம்**

